முன்னாள் தலைமைச் செயலாளர்

# பி.சங்கர் ஐ.ஏ.எஸ். மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ.5-

தமிழ்நாடு அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் பி.சங்கர் ஐ.ஏ.எஸ். அவர்கள் இயற்கை யெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாடு அரசின் முன்னாள் தலைமைச் செயலாளரும், 1966 ஆம் ஆண்டு தமிழ்நாடு பேட்ச் இந்திய ஆட்சிப் பணி அதிகாரியுமான பி.சங்கர் அவர்கள் மறைவெய்தினார் என்ற செய்தியறிந்து மிகுந்த வேதனையடைந்தேன். அவரது மறைவிற்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செய்யாறு உதவி ஆட்சியராக தனது இந்திய ஆட்சிப் பணியைத் துவங்கிய சங்கர் அவர்கள் மாநிலத்தில் பல்வேறு பொறுப்புகளிலும், ஒன்றிய அரசின் செயலாளர் பதவிகளிலும், ஒன்றிய திட்டக்குழு வின் செயலாளர் பதவியிலும், இறுதியாக ஒன்றிய விழிப்புணர்வு ஆணையத்தின் தலைவராகவும் திறம்பட நேர்மையுடன் பணியாற்றியவர்.

பி.சங்கர் அவர்களின் மறைவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவருடன் பணியாற்றிய சக இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளுக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும்

# பணியாளர்களுக்கு ஓய்வூதியம் : முதல்வருக்கு நன்றி!

## தமிழ்நாடு மாநில நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலை தொ.மு.ச. அறிக்கை!

சென்னை, நவ.5-

தமிழ்நாட்டில் கூட்டுறவுத்துறை அரசின் பொதுவிநியோகத்திட்டம் உள்ளிட்ட ஒய்நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. இத்துறை மூலம் கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும் அனைத்து வகைப்பணியாளர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கப்படாமல் இருந்து வந்தநிலையில் தொ.மு.ச. பேரவை உள்ளிட்ட அனைத்து வகை சங்கங்களும் அரசிடம் முறையிட்டு வந்தனர்.

இதனை கனிவுடன் பரிசீலித்த முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அவர்களுக்கும் கருணை ஓய்வூதியம் வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

இதன்மூலம் அனைத்து வகைகூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும்,பணியாற்றி ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கும் கருணை ஓய்வூதியம் வழங்க உத்திரவிட்ட தமிழ்நாட்டு முதலமைச்சர் திராவிட நாயகன் தளபதி அவர்களுக்கும், துணை முதலமைச்சர் உதயநிதி அவர்களுக்கும், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், தொ.மு.ச. பேரவை பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி.க்கும், அரசின் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர்/கூடுதல் தலைமைச் செயலாளர் ஜெ.இராதாகிருஷ்ணன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் முனைவர் என்.சுப்பையன் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளுக்கும், தொ.மு.ச. பேரவைத் தலைவர் கி.நடராஜன், பேரவைத் துணைத்தலைவர் இரா.பொன்னுராம் ஆகியோருக்கும், கூட்டுறவுத்துறை மூலம் செயல்பட்டு வரும் அனைத்து தொ.மு. சங்க தொழிலாளர்கள், நிர்வாகிகள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதாக தமிழ்நாடு மாநில நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகள் தொ.மு.சங்கம் மாநில பொதுச்செயலாளர் சு.பத்மநாபன் தெரிவித்துள்ளார்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; மராட்டிய மாநிலப் பேரவைத் தேர்தலையொட்டிய பிரச்சாரத்தில் தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார், அங்கே 'பா.ஜ.க. உள்ளிட்ட மகாயுதி கூட்டணி ஆளுங்கட்சி வேட்பாளர்களுக்குப் போலீஸ் வாகனங்களில் கட்டுக்கட்டாகப் பணம் எடுத்துச் செல்லப்படுகிறது' என்று குற்றம் சாட்டி இருக்கிறாரே ?

**பட்டணம் :** **ஆமாமய்யா; " ஒருபுறம் கட்டுக் கட்டாய்க் கள்ள நோட்டு, மறுபுறம் எட்டாய் மடிக்கப்பட்ட கசங்கிய ஒற்றை ரூபாய் நோட்டு, இது என்ன உண்டியா, இல்லை இதுதான் ('பா.ஜ.க.வின்') இண்டியா!" என்று கவிஞர் தணிகைச் செல்வன் எழுதியது நினைவுக்கு வருகிறது!**

கேரள மாநிலம் – பாலக்காடு – ஷோரனூர் அருகில் இரயில் மோதிய விபத்து: உயிரிழந்த

# சேலம் மாவட்ட துப்புரவுப் பணியாளர்கள் குடும்பத்தினருக்கு நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, நவ.4-**

**கேரள மாநிலம், பாலக்காடு, ஷோரனூர் அருகில் கேரளா எக்ஸ்பிரஸ் இரயில் மோதிய விபத்தில் உயிரிழந்த சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த துப்புரவுப் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்துள்ளார்.**

முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு :-

கேரளா மாநிலம், பாலக்காடு, ஷோரனூர், பாரதப்புழா பாலம் அருகில் 02.11.2024 அன்று பிற்பகல் கேரளா எக்ஸ்பிரஸ் இரயில் எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் இரயில் பாதையை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், ஆச்சாங்குட்டப்பட்டி, அடிமலை புதூர் கிராமத்தைச் சேர்ந்த லட்சுமணன் (வயது 55) (த/பெ.அண்ணாமலை), திருமதி.வள்ளி (வயது 45) (க/பெ.லட்சுமணன்), காரைக்காடு, டி.பெருமாள் பாளையத்தைச் சேர்ந்த லட்சுமணன் (வயது 45) (த/பெ.ராமசாமி), மற்றும் அல்லிக்குட்டையைச் சேர்ந்த திருமதி.ராஜம்மாள் (வயது 43) (த/பெ.வீரன்) ஆகிய நால்வரும் உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணியில் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன் அறிக்கை!



புதுக்கோட்டை நவ.5 -

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது. புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில் உள்ள புதுக்கோட்டை, விராலிமலை, கந்தர்வக்கோட்டை ஆகிய 3 சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்காளர் பட்டியல் சாரிபார்ப்பு மற்றும் வாக்காளர் சேர்த்தல் முகாம் நடைபெறுகிறது. இதில் 1.1. 2025 ல் 18 வயது பூர்த்தி அடைந்தவர்களை (31.12.2006க்கு முன் பிறந்தவர்கள்) வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படலாம். இந்த வாக்காளர் சேர்த்தல் மற்றும் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் சிறப்பு முகாம் 16.11.2024 சனி, 17.11.2024 ஞாயிறு மற்றும் 23.11.2024 சனி, 24.11.2024 ஞாயிறு ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது.

இந்த சிறப்பு முகாமில் புதிதாக பெயர் சேர்ப்பதற்கு படிவம் 6, ஆதார் விபரம் சேர்க்க படிவம் 6 பி., பெயர் நீக்கம் செய்ய படிவம் 7, எழுத்துபிழைகள், முகவரி மாற்றம் செய்ய படிவம் 8 ஆகியவற்றை பயன்படுத்தி வழங்கலாம்.

மேலும் இந்த படிவங்களை 29.10.2024 முதல் 28.11.2024 வரை வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் வழங்கலாம். மேலும் இந்த பணியில் புதிதாக தேர்ந்தேடுக்கப்பட்ட வாக்குச்சவாடி நிலை முகவர்கள் (பி. எல்.ஏ.2) மற்றும் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் சிறப்பாக செயல்பட வேண்டும்

என்றும், வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாம் குறித்து மாநகர, ஒன்றிய,

நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் கழகத்தினர் மற்றும் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ. 2) தெரிவித்து பணியினை செம்மையாக செய்திட வேண்டும் என்றும், பெயர் சேர்த்தல், நீக்கல் விவரங்களின் பட்டியலை தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைத்திட ஏதுவாக மாவட்டக் கழகத்திடம் மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் ஒப்படைத்திட வேண்டும்.

இவ்வாறு புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

என்.கௌதமன் தலைமை! உ.மதிவாணன் சிறப்புரை!

# நாகை நகர - வடக்கு ஒன்றிய தி.மு.க. வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம்!

## இரா.மாரிமுத்து, சிக்கல் என்.ஆனந்த் பங்கேற்பு!

நாகை, நவ.5-

நாகை மாவட்டம், நாகை நகர தி.மு.க. வாக்குச்சாவடி முகவர்கள் (பி. எல்.ஏ.2) கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் தலைமை தாங்கினார். நாகை நகரக் கழகச் செயலாளர் இரா. மாரிமுத்து முன்னிலை வகித்தார். மாவட்ட பொருளாளர் மு.லோகநாதன் வரவேற்றார். கூட்டத்தில் வாக்குச்சாவடி முகவர்கள் பணிகள் குறித்து நாகை சட்ட மன்ற தொகுதி பார்வையாளரும், தாட்கோ தலைவருமான உ.மதிவாணன் பேசினார். கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் கே.பாண்டியன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் இரா.முருகையன், எஸ். பால்ராஜ், ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, ஆர்.ஆர். குலோத்துங்கன், பாலமுரளி, நகர துணைச் செயலாளர்கள் பி.திலகர், வெற்றிலைகடைசிவா, சித்திரா குலோத்துங்கன், மாவட்ட பிரதிநிதி ரமணி மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், நகர் மன்ற உறுப்பினர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் கலந்து கொண்டனர்.

### நாகை வடக்கு ஒன்றியம்

நாகை வடக்கு ஒன்றிய வாக்குச்சாவடி முகவர்கள் (பி.எல்.ஏ.2) கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் தலைமை தாங்கினார். நாகை வடக்கு ஒன்றியச் செயலாளர் சிக்கல் என். ஆனந்த் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் வாக்குச்சாவடி முக வர்கள் பணிகள் குறித்து நாகை சட்ட மன்ற தொகுதி பார்வையாளரும், தாட்கோ தலைவருமான உ.மதிவாணன் பேசினார். கூட்டத்தில் நாகை வடக்கு ஒன்றிய நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள் கிளை செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வண்ணை தேவகி

**நவம்பர் 5 (2009)**



**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரது கொள்கைப் பற்றாலும், பேச்சாற்றலாலும் தன்னலம் கருதாத் தியாகத்தாலும் ஈர்க்கப்பட்டு, இளம்வயதிலேயே கழக மேடைகளில் உரையாற்றியவர்.**

**கழகம் நடத்திய போராட்டங்களில் எல்லாம் பங்கேற்று பலமுறை சிறை சென்றுள்ளார்.**

**கழக மகளிர் அணியின் செயலாளராகவும், துணைத் தலைவராகவும், இணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து வந்தவர்.**

**சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, மாநகராட்சி சுகாதாரநிலைக்குழுவின் தலைவராக திறம்பட பணியாற்றியவர்.**

**முதல்வர் கலைஞர் அவர்கள் 1999ஆம் ஆண்டு தமிழக அரசின் சார்பில் 'அம்பேத்கர் விருது' வழங்கி சிறப்பித்தார்.**

**"கழகம், கழகம் என்று தன்வாழ்நாள் முழுவதையும் கழகத்திற்காகவே செலவழித்து, அவர் பேசாத கிராமங்களே இல்லையென்ற அளவிற்கு, கழகப் பிரச்சாரத்தில் தன் இளம்பிராயத்திலிருந்து ஈடுபட்டவர்" என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

தாம்பரம் - காட்டாங்கொளத்தூர் இடையே

# சிறப்பு ரெயில்கள் இயக்கம்!

சென்னை, நவ.5–

சென்னை, தெற்கு ரெயில்வே சென்னை கோட்டம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:–

தீபாவளி பண்டிகையை கொண்டாட சொந்த ஊர்களுக்குச் சென்று விட்டு சென்னை திரும்பும் பயணிகளின் வசதிக்காக சிறப்பு மின்சார ரெயில்கள் இயக்கப்பட்டன.

அதன்படி, காட்டாங்கொளத்தூரில் இருந்து நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை 4, 4.30, 5, 5.45, 6.20 ஆகிய நேரங்களில் தாம்பரத்திற்கு சிறப்பு மின்சார ரெயில்கள் இயக்கப்பட்டன. இந்த ரெயில் பொத்தேரி, கூடுவாஞ்சேரி, ஊரப்பாக்கம், வண்டலூர் ஆகிய ரெயில் நிலையங்களில் நின்று சென்றது.

அதே போல, தாம்பரத்தில் இருந்து அதிகாலை 5.05 மணி மற்றும் 5.40 மணிக்கு காட்டாங்கொளத்தூருக்கு 2 சிறப்பு மின்சார ரெயில்கள் இயக்கப்பட்டது.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தீப்பொறி ஆறுமுகம்

**நவம்பர் 5 (2016)**



**சிறிய வயதிலேயே பேச்சாளராகி, கழக மேடைகளில் எந்த கருத்தையும் தைரியமாக எடுத்துச் சொல்லி, தமது பேச்சாற்றலால் பெரும் புகழ் பெற்று, தனக்கென்று ஒரு ரசிகர் பட்டாளத்தையே உருவாக்கிக் கொண்டவர்.**

**நெருக்கடிநிலை காலத்தில், மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**தலைவர் கலைஞர் அவர்கள், "இவர் தனது பதினைந்தாவது வயதிலேயே தந்தை பெரியார் அவர்களின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றி, பெரியாரால் அப்போதே பாராட்டப்பட்டவர். இவருடைய பேச்சைக் கேட்டு பேரறிஞர் அண்ணா அவர்கள்தான் இவருக்கு "தீப்பொறி" என்ற அடைமொழியை குறிப்பிட்டு, பின்னர் காலப்போக்கில் "தீப்பொறி" என்றாலே இவரைக் குறிப்பிடும் அளவிற்கு பெயர் பெற்று விட்டார்" என தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**